


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.6.2024) தலைமைச் செயலகத்தில், இலக்கியத்தின் மூலமாக தலித் மக்களின் குரலாக ஒலித்து, சமூக தொண்டாற்றி வரும் ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமாவுக்கு 2024 ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை வழங்கிச் சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நல ஆணையர் திருமதி வே. அமுதவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மாதவரத்தில் மருத்து முகாம்

மாதவரம், ஜூலை 12 – மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 17வது வட்டம், வடபெரும்பாக்கம் சென்னை மாநகராட்சி சமுதாய கூடத்தில் முன்னாள் மாமன்ற உறுப்பினர் என். கவிதா நாராயணன் ஏற்பாட்டில், வானகரம் அப்போலோ மருத்துவ மனையின் மாபெரும் மருத்துவ முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் 300–க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் முகாமை துவக்கி வைத்து இலவசமாக மருந்து மாத்திரைகளை வழங்கினார். வட்டச் செயலாளர் கே.கருணாகரன், சி.மூர்த்தி, சி. பாலாஜி, வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என். அஜய் தென்னவன், எம்.ஜான்சன், ஜிபூபாலன், எஸ்.சிவகுமார், பி.செந்தில், எம்.என்.தளபதி, விஜய் ஆனந்த், குமார், நந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

## ராஷ்ட்ரிய ஜனதாதளம் தலைவர்!

# லாலு பிரசாத்யாதவ் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



**சென்னை, ஜீன் 12 - ராஷ்ட்ரிய ஜனதா தளம் தலைவர் லாலு பிரசாத் யாதவ் அவர்களின் பிறந்த நாளையொட்டி அவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

ராஷ்ட்ரிய ஜனதா தளம் தலைவர் லாலு பிரசாத் யாதவ் அவர்களுக்கு இனிய பிறந்த நாள் வாழ்த்துகள்.

ஒடுக்கப்பட்டவர்களை முன்னேற்று வதற்காகத் தாங்கள் மேற்கொண்ட முயற்சிகள், செயல்படுத்திய புரட்சிகரத் திட்டங்கள் மற்றும் உறுதிகுலையாமல் மதச்சார்பின்மையை உயர்த்திப் பிடித்தது ஆகியவை ஒரு நியாயமான, சமநிலைச் சமுதாயத்தை வடிவமைப்பதில் பெரும் பங்காற்றியுள்ளன.

உங்களது வாழ்க்கைப் பணி எங்களுக்குத் தொடர்ந்து ஊக்கமளிப்பதாக அமைந்து வருகின்றது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

## திராவிட மாடல் ஆட்சியில் பழங்குடி இளைஞர்கள் தொழில் முகவர்களாகி சாதனை

# தமிழ்நாட்டில் புத்தாக்க நிறுவனங்கள் 8416 ஆக அதிகரிப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள் பாராட்டு!

**சென்னை, ஜீன் 12- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் புத்தாக்கத் தொழில் திட்டத்தால் தமிழ்நாடு பட்டியலின பழங்குடியின இளைஞர்கள் இந்தியாவிலேயே முதல் முதலாக தொழில் முகவர்களாக உயர்ந்து சாதனை படைத்துள்ளனர் என்று அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு 2021ம் ஆண்டு பொறுப்பேற்ற பிறகு புத்தொழில் நிறுவனங்களுக்கு அளித்துவரும் ஊக்கம் காரணமாகத் தமிழ்நாட்டில் 6,384 புத்தொழில் நிறுவனங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. பட்டியலின மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளைப் பெருக்கிட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் திட்டத்தின் மூலம் புதிய தொழில் முனைவோர் உருவாகியுள்ளதோடு பலருக்கு வேலை வாய்ப்புகளும் கிடைத்துள்ளன.

**தமிழ்நாடு புத்தொழில் புத்தாக்கக் கொள்கை**

திராவிட மாடல் அரசால் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை 20.9.2023ல் முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. 2021ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் எண்ணிக்கை 2,032. இன்றைய நிலவரப்படி இது 4 மடங்கிற்கும் மேல் அதிகரித்து 8,416ஐ எட்டியுள்ளது. மகளிர் ஸ்டார்ட்அப்களின் எண்ணிக்கை 2021ம் ஆண்டில் 966 ஆக இருந்தது தற்போது மூன்று மடங்குமேல் அதிகரித்து 3,163 ஆக உயர்துள்ளதே இந்த அரசின் செயல்பாட்டிற்குக் கிடைத்த வெற்றியாகும்.

ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு உகந்த சூழலைக் கட்டமைத்துச் செயல்படும் மாநிலங்களின் பட்டியலை ஒன்றிய அரசு வெளியிட்டது. இதில் தமிழ்நாடு முதல் நிலையை பிடித்திருப்பதிலிருந்தே இந்த அரசின் சாதனையைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

**தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதி**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு அனைத்துச் சமூகத்தினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில் மிகுந்த அக்கறை செலுத்தி பட்டியலின மற்றும் பழங்குடியினரால் நிறுவப்படும் புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவித்து ரூ.80 கோடி சிறப்பு நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. 38 நிறுவனங்களுக்கு ரூ.55.20 கோடி பங்கு முதலீடுகள் வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் அனைவரையும் உள்ளடக்கிய புதுயுகத் தொழில் முனைவு வளர்ச்சியினை அடையும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசால் பட்டியலினத்தவர் பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டமானது 2022 - 23 ஆம் நிதி ஆண்டில் கொண்டுவரப்பட்டது. இத்திட்டமானது தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம், இப்பிரிவினை சார்ந்த தொழில் முனைவோர்களால் தொடங்கி நடத்தப்பட்டு வரும் புத்தொழில் நிறுவனங்களில் அரசு முதலீடு செய்து வருகின்றது.

கடந்த இரண்டு நிதி ஆண்டுகளில், நாட்டின் முன்மாதிரியாக விளங்கும் இத்திட்டத்தின் வாயிலாக 38 புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.55.2 கோடி பங்கு முதலீடு உறுதி செய்யயப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் புத்தாக்கத் தொழில் திட்டத்தால் இந்தியாவிலேயே முதல் முதலாக தொழில் முகவர்களாக உயர்ந்து சாதனை படைத்துள்ள தமிழ்நாடு பட்டியலின பழங்குடியின இளைஞர்கள்.

சென்னை மட்டுமல்லாது சேலம், கன்னியாகுமரி, மதுரை, திருச்சி, கோயமுத்தூர், ஈரோடு, நீலகிரி ஆகிய பல்வேறு மாவட்டத்தினை சேர்ந்தோர் இதன் வாயிலாக பயன் பெற்றுள்ளனர்.

இயந்திரவியல், வேளாண் தொழில்நுட்பம், ஊடகத்துறை, செயற்கை நுண்ணறிவு, மருத்துவத்தொழில் நுட்பம், பசுமை எரிவாயு தயாரித்தல், இணைய வழி வணிகம், உணவு மதிப்புகூட்டுதல், விண்வெளித் தொழில்நுட்பம் என பல்வேறு துறைகளில் புத்தாக்க வணிக மாதிரிகளை கொண்டு இயங்குபவையாக இந்த நிறுவனங்கள் உள்ளன.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் புத்தாக்கத் தொழில் திட்டத்தால் இந்தியாவிலேயே முதல் முதலாக தொழில் முகவர்களாக உயர்ந்து சாதனை படைத்துள்ள தமிழ்நாடு பட்டியலின – பழங்குடியின இளைஞர்கள்.

இத்திட்டத்தில் பயன்பெற்ற ட்டோ மேன் (Tow man) என்ற நிறுவனமானது முதலீட்டிற்கு பின்பு தனது புத்தாக்க செயல்பாடுகளால் அமெரிக்கத் தமிழ் நிதியத்திடம் இருந்து ரூ.1 கோடி முதலீடு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஆர்பிட் எய்ட்(ORBID AID) என்ற நிறுவனமானது உலகில் விண்வெளித் தொழில்நுட்பம் சார்ந்து செயல்படும் 1544 புத்தொழில் நிறுவனங்களை ஒப்பிட்டு நடைபெற்ற ஆய்வில், சிறந்த 20 புத்தொழில் நிறுவனங்களில் ஒன்றாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**தொழில்நுட்ப சேவை!**

குகன் இண்டஸ்டிரியல் அண்ட் மெனுபேக்சரிங் (Gugan Industrial and Manufacturing Industries) நிறுவனமானது கடினமான உலோகத்தையும் எளிதாக வெட்டும் தனித்துவமான தொழில் நுட்பத்தினை இந்தியாவிலேயே முதல் முதலில் தயாரித்த நிறுவனமாக உள்ளது. எகோஸாப்ட் சொலுசன்ஸ் என்னும் நிதித் தொழில்நுட்ப நிறுவனம் சமீபத்தில் பில்லியன் லோன்ஸ் என்ற நிறுவனத்துடன் இணைந்து வாடிக்கையாளர்களின் நிதித்தேவையினை உடனடியாக நிறைவு செய்யும் வகையில் தொழில்நுட்ப சேவையினை வழங்கி வருகிறது.

100 சதவீதம் பழங்குடிகளால் நிர்வகிப்பட்டு இத்திட்டத்தில் முதலீடு பெற்ற ட்ரைபல் கிரீன் ப்புயல் (Tribal Green Fuel) நிறுவனமானது லாண்டனா காமரா என்னும் களைச்செடியில் இருந்து எரிபொருள் தயாரிக்கிறது. ஈரோடு மாவட்டம் தாளவாடி வனப் பகுதியில் செயல்படும் இந்த நிறுவனத்தின் வாயிலாக சுற்றியுள்ள வனக்கிராமங்களில் பலர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இது அப்பகுதியின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு துணை புரிவதாக உள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்படும் லெமூரியன் வெஞ்சர்ஸ் (Lemurian Ventures) நிறுவனம் உலர்மீன் (கருவாடு) தொழிலில் புதுமையான பேக்கேஜிங் தொழில்நுட்பத்தின் மூலம் வாசனை வெளிவராத வகையில் விற்பனை செய்து வருகிறது. இதன் மூலம் பல்வேறு இடங்களில் கருவாடு விற்பதற்கான சந்தை வாய்ப்பு அதிகரித்துள்ளது. மீனவர்களின் பாரம்பரிய தொழிலில், நவீன தொழில் நுட்பத்தினை பயன்படுத்துவதன் வாயிலாக சந்தை வாய்ப்பினை அதிகரித்து ஒரு முன்மாதிரியாக இந்த நிறுவனம் இயங்கி வருகிறது.

கோத்தகிரி மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் விதமாக அவர்களது பாரம்பரிய தயாரிப்புகளை இணையதளம் வாயிலாக விற்பனை செய்யும் ஐ கேம் டெக்னாலஜிஸ் (Icam Technologies) நிறுவனமானது அரசின் முதலீட்டின் வாயிலாக இந்த தளத்தினை சிறப்பாக வடிவமைத்து வருகிறது. சமீபத்தில் ஹூண்டாய் நிறுவனத்தின் காலண்டரில் குறும்பர் பழங்குடி ஓவியத்தினை வரையும் சந்தை வாய்ப்பினை பெற்று, வணிகத்தில் சிறப்பாக இயங்கிவருகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற்ற நிறுவனங்கள் சுமார் 200க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளன. இவ்வாறு புத்தாக்க சிந்தனையுடனும், விளிம்பு நிலை சமூகத்தினரின் மேம்பாட்டிற்கு உதவும் வகையிலும், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் விதமாகவும் இயங்கிவரும் பட்டியலின/பழங்குடியின பிரிவினரால் நடத்தப்படும் மேலும் பல புத்தொழில் நிறுவனங்களை தேர்ந்தெடுத்து முதலீடு வழங்கும் பணிகளில் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கமானது ஈடுபட்டு வருகின்றது.

**சாதனை குறியீடாகும் புத்தொழில் வளர்ச்சி!**

2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்திட வேண்டும் என்ற உயர்ந்த இலக்கை நிர்ணயித்துச் செயல்பட்டு வரும் முதலமைச்சரின் குறிக்கோளை எட்ட புத்தொழில் துறை வளர்ச்சி ஒரு சாதனைக் குறியீடாகத் திகழ்கிறது.

புத்தொழில் பதித்துவரும் வெற்றியைத் தக்கவைக்கும் நோக்கோடு உலகின் பல்வேறு பகுதிகளில் முத்திரை பதித்த முன்னணிப் புத்தொழில் நிறுவனங்களும் இளம் தொழில் முனைவோரும் கலந்துகொள்ளும் வகையில் உலகப் புத்தொழில் மாநாடு (Global Startup Summit) வரும் 2025ம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஸ்டார்ட்அப் திருவிழா (Startup Thiruvizha)**

புத்தாக்கத் தொழில் வளர்ச்சிக்காக கோவையில் 2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலமைச்சர் அவர்கள் நடத்திய தமிழ்நாடு புத்தொழில் திருவிழா 2023 மாபெரும் வெற்றி கண்டது. 21ஆயிரம் பார்வையாளர்களோடு, 450 புத்தொழில் நிறுவனங்கள் பங்கேற்ற கண்காட்சி அரங்கமும் இத்திருவிழாவில் இடம்பெற்றது. இந்த விழாவில் 3 கோடியே 64 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்புக்கு வணிகம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் புத்தாக்கத் தொழில் திட்டத்தால் இந்தியாவிலேயே முதல் முதலாக தொழில் முகவர்களாக உயர்ந்து சாதனை படைத்துள்ள தமிழ்நாடு பட்டியலின – பழங்குடியின இளைஞர்கள்.

இப்படிப் பல்வேறு முயற்சிகளை முனைப்புடன் மேற்கொண்டு வருவதன் மூலம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் புத்தாக்கத் தொழில்கள் வளர்ச்சியில் பட்டியலின மலைவாழ் இன இளைஞர்களுக்கு ஊக்கம் தந்து உற்சாகப்படுத்தி, அவர்களை தொழில் முகவர்களாக உயர்த்துவதில் தனிக் கவனம் செலுத்தி வருகிறார்கள். இதனை பட்டியலின பழங்குடி மக்கள் பாராட்டி வரவேற்கிறார்கள்.

## முனைவர் கோவி. செழியன் சிறப்புரை!

# ஜீன் 16ம் தேதி காரைக்குடியில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பட்டிமன்றம்!

## அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமை! மு.தென்னவன் தொடங்கி வைக்கிறார்!

*சிவகங்கை. ஜூன் 12 -*

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகர தி.மு.க. சார்பில் வருகிற 16ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு நாள் பட்டிமன்றம் நடைபெற உள்ளது. சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் காரைக்குடி மாநகர மேயரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான எஸ்.முத்து துரை திருமதி. தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் அ. கணேசன், முன்னாள் எம்.எல்.ஏ., சுப. துரைராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் த.சேங்கை. மாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ, கே.எஸ். எம்.மணிமுத்து, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், நிர்வாகிகள் சன். சுப்பையா, உதயம் ராஜூ, லட்சுமி ராஜ் கணேஷ், பெரி. வயிரவன், சே.சொக்கலிங்கம், அன்பு என்ற சேவியர், போஸ் குணசேகரன், குழ. ஜான் கென்னடி, இராம. அன்பழகன், மெ. பழனியப்பன், துரை.நாகராஜ், காரை சுரேஷ், பா.கணேசன், மாமன்ற உறுப்பினர்கள் எம்.கார்த்திகேயன், எஸ்.மைக்கேல், ஹேமலதா செந்தில், தெய்வானை இளமாறன், கலா. காசிநாதன், நாச்சம்மை சிவாஜி, எஸ்.முகமது சித்திக், ஜெ.பிலோ மீனா, சுப. ஹரிதாஸ் ராணி ஜெய்த்துன்சேட், சந்தியா கார்த்திகேயன், திவ்யா சக்தி, விஷ்ணு பெருமாள், எஸ். பூமிநாதன் மலர்விழி பழனியப்பன், லில்லி திரேசு அருள்ராஜ், தனம் சிங்கமுத்து ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

துணை மேயரும் காரைக்குடி நகரக் கழகச் செயலாளருமான என். குணசேகரன் வரவேற்றுப் பேசுகிறார். கலைஞர் நூற்றாண்டு நிறைவு நாள் பட்டிமன்றத்தினை முன்னாள் அமைச்சரும் இலக்கிய அணி புரவலருமான மு.தென்னவன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்.

அரசு கொறடா முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ. தலைமையில் கலைஞர் ஊட்டிய உணர்வே என்ற தலைப்பில் கரூர் முரளி, சரத்பாலா, கலைஞர் தீட்டிய திட்டங்களே என்ற தலைப்பில் நெல்லிக்குப்பம் புகழேந்தி, சைதை சாதிக், ஆகியோர் கலந்து கொண்டு பேசுகிறார்கள். மாநகர துணைச் செயலாளர் சொ. கண்ணன் நன்றி கூறுகிறார்.

பட்டிமன்ற நிகழ்ச்சி ஏற்பாடுகளை காரைக்குடி மாநகர செயலாளர் என். குணசேகரன் தலைமையில் காரைக்குடி நகர் கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

GOVERNMENT OF TAMIL NADU
RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ DEPARTMENT

TENDER NOTICE No.A3/147/2024A Dated: 08.06.2024 -
FORM OF CONTRACT: ITEM RATE (Two Cover System)

For and on behalf of the Governor of Tamil Nadu, Additional Collector (D), DRDA, Cuddalore District invites e-bids (Two Cover System) for Construction of Panchayat Union Office Building @ Melbhuvanagiri block under Scheme Component of Pooled Assigned Revenue (SCPAR) -2023-24 Scheme as detailed below:

| Sl No | Name of work | Approximate value | Period of contract |
|---|---|---|---|
| 1. | Construction of Panchayat Union Office Building @ Melbhuvanagiri Block under SCPAR -2023-24 Scheme | Rs. 559.00 Lakhs | 18 Months |

1. For details visit www.tntenders.gov.in
2. The e-bid document can also be downloaded free of cost upto 12.07.2024.
3. Amount of Earnest Money Deposit will be 1% of the estimated value.
4. Important dates:

| | | |
|---|---|---|
| 1 | Last Date and time for downloading of eBid Document | 12.07.2024 upto 3.00 pm |
| 2 | Last Date and time for online submission of the Bid Document | 12.07.2024 upto 3.00pm |
| 3 | Date and Time of online opening of the Bid Document | 12.07.2024 at 4.00pm |

5. Other details can be seen in the bidding document.

DIPR/1826/TENDER/2024 Additional Collector (D), DRDA., Cuddalore.

TAMIL NADU CEMENTS CORPORATION LIMITED
(A GOVERNMENT OF TAMIL NADU UNDERTAKING)
5th Floor, Aavin Illam, No.3A, Pasumpon Muthuramalingam Salai, Nandanam, Chennai-600 035.

e-TENDER NOTICE

| e.Tender Ref.Nos | Name of the Works | Approx. value in Rs. | EMD in Rs. | Due Date |
|---|---|---|---|---|
| 05/2024-25 | Supply of Cashew Nut Shell on F.O.R. basis at Ariyalur Cement Works, Ariyalur District, T.N | 1.18 Crore | 1.00 lakh | 26.06.2024 |
| 06/2024-25 | Supply of High Chrome Liner Plate Castings to 1MTPA Plant at Ariyalur Cement Works, Ariyalur District, T.N | 74.00 Lakh | 70,000 | 26.06.2024 |
| 07/2024-25 | Engaging Consultant for Preparation of Detailed Feasibility Report (DFR) for Installation of New Green Field Cement Plant at TANCEM and Upgradation of Existing 1 MTPA Plant at ACW, Ariyalur District, T.N | 54.50 Lakh | 50,000 | 26.06.2024 |

Important Note: For e-tender nos.05 & 06, a pre-bid meeting will be held on 18.06.2024 at 3.00 pm and 3.30 pm respectively and for e-tender no.07, a pre-bid meeting will be held on 19.06.2024 at 3.00 pm at TANCEM, Registered Office, 5th Floor, Aavin Illam, No.3A, Pasumpon Muthuramalingam Salai, Nandanam, Chennai – 600 035. The Tender document can be downloaded from https://tntenders.gov.in Corrigendum /Addendum to this publication, if any would appear only on the above said website.

DIPR/1829TENDER/2024 General Manager Marketing / DRO